கிழக்கு மாகாண
விவசாய, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி,
கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி,
மீன்பிடித்துறை அமைச்சின் கௌரவ அமைச்சர்
கலாநிதி துரையப்பா நவரெத்தினராஜா
அவர்களின்



# 2010 ஆம் நிதி ஆண்டிற்கான பாதீட்டு உரை

விவசாய, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி,
கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடித்துறை அமைச்சு,
கிழக்கு மாகாணம்.
24.11.2009

**கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடித்துறை அமைச்சின் கௌரவ அமைச்சர் கலாநிதி துரையப்பா நவரெத்தினராஜா அவர்களின் 2010 ஆம் நிதி ஆண்டிற்கான பாதீட்டு உரை**

வரலாற்று சிறப்பு மிக்க கிழக்கு மாகாண சபையின் கௌரவ அவைத் தலைவர் அவர்களே, கௌரவ முதலமைச்சர் அவர்களே, கௌரவ அமைச்சர்களே, கௌரவ மாகாண சபை உறுப்பினர்களே, மாகாண சபையின் பிரதம செயலாளர், மற்றும் செயலாளர்கள், பிரதிப்பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், ஏனைய உத்தியோகத்தர்களே!

கிழக்கு மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுவதிலும், விவசாய அமைச்சின் பாதீட்டினை கௌரவம் மிக்க இச்சபையில் சமர்ப்பித்து விவாதிப்பதிலும் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கிழக்கு மாகாணம் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் கடந்த 30 வருட காலமாக எமது மக்கள் இன்னலுக்கும், துன்பியலுக்கும் உட்பட்ட வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருந்தனர்.இவ் அவல நிலையில் இருந்த இம் மக்களை விடுவித்து, இம் மக்களது வாழ்க்கையில் ஒளியூட்டிய மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு எனது முதற்கண் வாழ்த்துக்களைத் தெரிவித்து, கிழக்கு மாகாண அபிவிருத்தியின் செயலணிக்குழுத் தலைவராகச் செயற்பட்டு, கிழக்கு மாகாணம் சகல துறைகளிலும் முன்னேறுவதற்கு அத்திவாரமிட்ட எமது ஜனாதிபதி அவர்களின் சிரேஷ்ட ஆலோசகரும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினருமான திரு.பஷில் ராஜபக்ஷ அவர்களுக்கு எனது நன்றிகளையும் தெரிவிக்கின்றேன்.

கடந்த ஒருவருட காலமாக மாகாண சபையின் வரலாற்றில் கிழக்கு மாகாண விவசாய, கால்நடை அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடித்துறை அமைச்சின் அமைச்சராக நானும், எனது அமைச்சு உத்தியோகத்தர்களும் கிழக்கு மாகாண அபிவிருத்திக்காக தீட்டிய திட்டங்களுக்கு ஒத்தாசை புரிந்து, எனது அமைச்சிற்கு உட்பட்ட சகல துறைகளையும் அபிவிருத்தி செய்வதில் எனக்கும், எனது அமைச்சிற்கும் உற்சாகமும், உத்வேகமும் தந்து, நாட்டின் ஏனைய மாகாணங்களைவிட கிழக்கு மாகாணம் விவசாயத் துறையிலும், கைத்தொழில் துறையிலும் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதற்கு தோளோடு தோள் நின்ற எனது அருமை விவசாய பொது மக்களுக்கு இவ் வரலாற்றுச் சிறப்புமிக்க இத் தருணத்தில் வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் நானும், எனது அமைச்சு உத்தியோகத்தர்களும் மிக்க மகிழ்ச்சிடைகின்றோம்.

மேலும் எங்களது இலக்கினை அடைந்து கொள்வதற்கு மாகாண மட்ட திணைக்களங்களும், அவை சார்ந்துள்ள அமைச்சுகளின் கௌரவ அமைச்சர்களுக்கும்,அவர்களின் செயலாளர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எங்களது அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளுக்கும், நடவடிக்கைக்களுக்கும் பெரும் பங்காற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சின் செயலாளருக்கும், உத்தியோகத்தர்களுக்கும், பிரதம செயலாளருக்கும் அவரின் செயலக உத்தியோகத்தர்களுக்கும் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய கௌரவ மாகாண சபை உறுப்பினர்களுக்கும் எனது இனிய வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டு எனது இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கிழக்கு மாகாண சபையின் இரண்டாவது வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை கௌரவமிக்க இச் சபைக்கு சமர்ப்பிப்பதில் பொருமையடைகின்றேன்.

கிழக்கு மாகாண சபையின் 2010 ம் நிதி ஆண்டு காலப்பகுதிக்கு இம் மாகாண சபையின் பாதீட்டில் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி 12,448 மில்லியன் ரூபாவினை பின்வருமாறு செலவிட கிழக்கு மாகாண சபை திட்டமிட்டுள்ளது.

| | |
|---|---|
| மீண்டெழும் செலவினங்களுக்காக | 10,855 மில்லியன் ரூபாவும் |
| மூலதன செலவினங்களுக்காக | 1,593 மில்லியன் ரூபாவுமாக |
| மொத்தம் | 12,448 மில்லியன் ரூபா |

உள்நாட்டு நிதிமூலங்களில் இருந்தும்,

இதற்கு மேலாக வெளிநாட்டு நிதி உதவிகளாக 933 மில்லியன் ரூபாவும், வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக 2,309 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 3,242 மில்லியன் ரூபா வெளிநாட்டு நிதி உதவியும் பிரயோகிக்கப்படவுள்ளது. அத்துடன் கிழக்கு மாகாண வருமான அறவீடாக 340 மில்லியன் ரூபாவையும் சேர்த்து மொத்தம் 16,030 மில்லியன் ரூபா இம் மாகாணத்தில் 2010 ம் நிதி ஆண்டில் பிரயோகிக்கப்படவுள்ளது.

இவ் மொத்த நிதி ஒதுக்கீட்டுத் தொகையில் எமது அமைச்சிற்கு 477 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. எமது அமைச்சிற்கு வழங்கப்பட்ட இவ் நிதியினை எமது அமைச்சின் குறிக்கோள்களையும், நோக்கத்தினையும் அடையக்கூடியவாறு 2010 ம் நிதி ஆண்டில் செலவு செய்ய பல்வேறு வியூகங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எமது அமைச்சின் நோக்கமானது கிழக்கு மாகாணத்தில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய விவசாய, கால்நடை உற்பத்தி, கிராமிய கைத்தொழில், உள்ளூர் மீன்பிடி அபிவிருத்தியினை ஏற்படுத்துவதன் மூலம் கிழக்கு மாகாணத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிக்கச் செய்து, தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு கிழக்கு மாகாணத்தின் அதிகரித்த பங்களிப்பை வழங்குதலாகும். இதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்தி குதூகலமான வாழ்க்கையில் மக்களை இணைத்து தென்கிழக்காசியாவில் முன்னணி நாடாக இலங்கையை மிளிரச் செய்வதாகும்.

2010 ம் நிதி ஆண்டில் எமது அமைச்சின் கீழ் பின்வரும் திணைக்களங்கள் ஒன்றிணைக்கப்பட்டு செயற்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- விவசாயத் திணைக்களம்,
- கால்நடை உற்பத்தி அபிவிருத்தித் திணைக்களம்,
- கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்
- உள்ளூர் மீன்பிடித்துறைப் பிரிவு

எதிர்காலத்தில் இவ் அமைச்சுடன் இணைந்ததாக சேர்க்கப்பட வேண்டிய துறைகள் சேர்க்கப்பட்டு ஒன்றிணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென நம்புகின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் 70% மான மக்கள் விவசாய, கால்நடை, கிராமிய கைத்தொழில், மீன்பிடி துறைகள் மூலமே தமது ஜீவனோபாய வாழ்க்கையினை மேற்கொண்டு தொழில் வாய்ப்பினையும், வருமானத்தையும் பெறுகின்றனர். இம்மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சியினையும், தொழில் வாய்ப்பினையும் ஏற்படுத்தி வழங்குவதிலும் ஏழை, எளிய மக்களை பசி, பட்டினி கொடுமைகளில் இருந்து காப்பாற்றிக் கொள்வதிலும் முக்கிய பங்களிப்பு செய்யும் அமைச்சாக எனது அமைச்சு செயற்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

## 2009ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட
## அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்

எமது அமைச்சினால் 2009ம் வருடத்தில் விவசாய, கால்நடை, கிராமிய கைத்தொழில், உள்ளூர் மீன்பிடித் துறைகளினூடாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் கிழக்கு மாகாணத்தின் மூலை, முடுக்குகளிலெல்லாம் முன்னெடுக்கப்பட்டு, வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருவதனை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

## விவசாய அபிவிருத்தி

"நாம் பயிரிடுவோம். நாட்டை கட்டியெழுப்புவோம்" எனும் மகிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் பல்வேறு விவசாய அபிவிருத்தித் திட்டங்களை நாம் கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் விவசாய செயற்பாட்டில்

ஒரு கிராமத்தில் ஒரு வகைப்பயிரிடல்
பயிரிட்டு நாட்டைக் கட்டியெழுப்புதல்
பழப்பயிர்ச்செய்கைக் கிராமங்களைத் தோற்றுவித்தல்
வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை
தேனீ வளர்ப்பிற்கான பெட்டிகள் வழங்குதல்
விவசாயக் கிணறுகளை அமைத்து வழங்குதல்
சேதனப்பசளை பிரயோகத்தை மேம்படுத்தல்
பாடசாலை மட்டத்தில் பயிர்ச்செய்கையின் முக்கியத்துவத்தை மேம்படுத்தல்

போன்ற வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றியினையும் ஈட்டியுள்ளது. அத்துடன் கிழக்கு மாகாணத்தில் 2009 சிறுபோகத்தில் 4,466 ஏக்கர் புதிய பயிர்ச்செய்கை நிலங்களாக பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தி, மொத்தம் 13,233 ஏக்கர் நிலப்பரப்பில் விசேட மறுவயற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இவற்றுக்கு மேலாக கைவிடப்பட்ட காணிகளில் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளும் விசேட வேலைத்திட்டத்தின் கீழ்

- 30,000 ஏக்கர் கைவிடப்பட்ட காணிகளில் நெற்பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளுதல்
- ஏற்கனவே நெற்செய்கையில் ஈடுபடுத்தப்பட்டு வரும் காணிகளில் இனங்காணப்பட்ட 12,500 ஏக்கார் காணிகளின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்
- 5,900 ஏக்கர்களில் மேலதிகமாக மறுவயற் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளுதல்

ஆகிய இலக்குகளை கொண்ட செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாணம் கடந்த வருடம் நெல் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளதுடன், மேலதிக உற்பத்தியினை ஏனைய மாகாணங்களுக்கு வழங்கியது போன்று, இம்முறை நெல் உற்பத்தியிலும் , ஏனைய உப உணவு உற்பத்தியிலும் தன்னிறைவு நிலையை அடைவதுடன், ஏனைய மாகாணங்களுக்கும் மேலதிக உற்பத்தியினை வழங்கி விவசாய செயற்பாட்டில் கிழக்கு மாகாணம் ஏனைய மாகாணங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழும் என்பதனை பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் இச்சபைக்கு வெளிப்படுத்துகின்றேன்.



3

கிழக்கு மாகாணத்தில் 06 கிராமங்கள் பழக்கிராமங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. விவசாய உற்பத்திக்குத் தேவையான நீர்ப்பாசன வசதியை அதிகரிக்கும் நோக்குடன் 60 விவசாயக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் தேனீ வளர்ப்பினை அதிகரிக்குமுகமாக 91 இடங்களில் தேனீ வளர்ப்பு திட்டங்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பழ மற்றும் மரக்கறி வகைகள் அறுவடையின் பின் பழுதடைவதால் அவற்றை பழுதுபடாமல் பாதுகாக்கும் 1,000 உபகரணங்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. அத்துடன் உரத்திற்குப் பதிலாக சேதனப் பசளை உபயோகத்தை விவசாயிகளிடையே ஊக்கப்படுத்துமுகமாக சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

## கால்நடை அபிவிருத்தி

கால்நடை மிருக வைத்தியத்திற்குத் தேவையான நவீன உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு, புதிதாக 17 கால்நடை வைத்திய நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. ஆடு வளர்ப்பை ஊக்குவிக்கும் முகமாக 6 இடங்களில் ஆடு வளர்ப்பு கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன், கால்நடைகளை விற்பனை செய்யும் சந்தைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. 20 ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணைகள் அமைக்கப்பட்டு, நல்லினக்காளைகள் கொள்வனவு செய்யப்பட்டு கால்நடை வளர்ப்போருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதே போன்று ஆடு உற்பத்தியை பெருக்குவதற்கான நல்லினக்கடாக்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. கால்நடைகளுக்கு செயற்கை முறை சினைப்படுத்தலுக்குரிய நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதே போல கிராமிய பொருளாதாரத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் கொல்லைப்புற கோழி வளர்ப்புத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பால் உற்பத்தியை பெருக்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட கிராமங்கள் பால் கிராமங்களாக மாற்றமடைந்துள்ளன.

## கைத்தொழில் அபிவிருத்தி

கைத்தொழில் அபிவிருத்தியை முன்னெடுக்கும் நோக்கில் கைவிடப்பட்ட நிலையிலிருந்த 10 கைத்தொழில் நிலையங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. அதே போல, பழைய தொழில்நுட்ப பயிற்சிகளுக்கு மாற்றீடாக உணவு பதனிடல், தோல் உற்பத்தி பொருட்கள், மின்சார கம்பி இணைப்புக்கள், இயந்திரங்கள் பழுது பார்த்தல், கணனி வன்பொருள் பயிற்சிகள் என்பன தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் வேலை வாய்ப்பினை வழங்குவதுடன் சுயதொழில் முயற்சிகளில் இளம் சந்ததியினர் ஈடுபடுவதையும் ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நன்னீர் மீன் வளர்ப்பு அபிவிருத்தி

எமது அமைச்சு நன்னீர் மீன்பிடித்துறையினை அபிவிருத்தி செய்வதில் அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. இதற்கமைவாக 2 மில்லியன் மீன்குஞ்சுகள் கிழக்கு மாகாணத்தில் 13 குளங்களில் இருப்புச் செய்யப்பட்டுள்ளது. நன்னீர் மீன் வளர்ப்பை மேலும் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தடாக மீன் வளர்ப்புத் திட்டம் எமது அமைச்சின் மீன்பிடிப் பிரிவினால் அமுல்படுத்தப்பட்டு வருவதுடன், தெரிவு செய்யப்பட்ட மீன்பிடிச் சங்கங்களுக்கான தோணிகள், வலைகள், மீனவர்களுக்கான பயிற்சி நெறிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. நன்னீர் மீன்பிடித்துறையில் நண்டு வளர்ப்பு, இறால் வளர்ப்புக்களை ஊக்குவிக்கும் நோக்கில் கூடுகள் மற்றும் தொழில் வழிகாட்டல்கள் என்பன மீன்பிடிப்பிரிவினால் வழங்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடித்துறையினை அபிவிருத்தி செய்வதுடன் மக்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவை வழங்கியும் மீன்பிடித்துறையில் நேரடி வேலை வாய்ப்புக்களையும், மறைமுக வேலை வாய்ப்புக்களையும் அதிகரிக்கச் செய்வதன் மூலம் கிழக்கு மாகாண மீனவ சமூக மக்களின் வாழ்க்கைத்தரத்தினையும் உயர்த்த முடிந்துள்ளது.



4

## 2010ம் ஆண்டின் ஒதுக்கீடும், அபிவிருத்தி வேலைகளும்

அமைச்சினது அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பது தொடர்பில் அமைச்சு அலுவலகத்திற்கும், அமைச்சிற்கு உட்பட்ட திணைக்களங்களுக்கும் 2010ம் நிதியாண்டில் மீண்டெழும் செலவின நோக்கங்களுக்காக 319 மில்லியன் ரூபாவும், மூலதன செயற்திட்ட நோக்கங்களுக்காக 158 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 477 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நிதி மூலங்கள்

இந்நிதியாண்டில் அமைச்சிற்கும், அமைச்சிற்கு உட்பட்ட திணைக்களங்களினதும் செயற்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட 477 மில்லியன் ரூபாவில் பிரமாண அடிப்படையிலான மூலதன மானியக் கொடை மூலம் (CBG) 47 மில்லியன் ரூபாவும், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானிய கொடை மூலம் (PSDG) 111 மில்லியன் ரூபாவும் பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது.

## துறை ரீதியான ஒதுக்கீடு

2010ம் நிதியாண்டில் மீன்பிடித் துறை உட்பட அமைச்சு அலுவலகச் செயற்பாட்டிற்கு 82 மில்லியன் ரூபாவும், விவசாயத் துறை செயற்பாட்டிற்கு 151 மில்லியன் ரூபாவும், கால்நடை அபிவிருத்தி செயற்பாட்டிற்கு 148 மில்லியன் ரூபாவும், கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி செயற்பாட்டிற்கு 97 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்நிதி ஒதுக்கீட்டின் மூலம் குறிப்பிட்ட துறைகள் ஒவ்வொன்றும் திட்டமிட்ட முறையில் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மூலதன அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்

இந்நிதியாண்டில் மூலதன வேலைத்திட்டங்கள் தொடர்பில் அமைச்சு அலுவலகத்திற்கு (உள்ளூர் மீன்பிடி உட்பட) 39 மில்லியன் ரூபாவும், விவசாயத் திணைக்கள அபிவிருத்தி வேலைகளுக்கு 52 மில்லியன் ரூபாவும், கால்நடை உற்பத்தி அபிவிருத்தி திணைக்கள வேலைகளுக்கு 47 மில்லியன் ரூபாவும், கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி திணைக்கள வேலைகளுக்கு 20 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 158 மில்லியன் ரூபா அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்குப் பிரயோகிக்கப்பட உள்ளன.



5

எமது அமைச்சினால் முன்னெடுக்கப்படும் மூலதன வேலைத் திட்ட நிதி ஒதுக்கீடு.
(மில்லியன் ரூபாவில்)

| நிதி மூலம் | அமைச்சு அலுவலகம் | | | விவசாயத் திணைக்களம் | கால்நடை அபிவிருத்தி திணைக்களம் | கிராமிய கைத்தொழில் திணைக்களம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சு அலுவலகம் | மீன்பிடி | மொத்தம் | | | | |
| பிரமாண அடிப்படை கொடை | 11 | 6 | 17 | 12 | 10 | 8 | 47 |
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை | 12 | 10 | 22 | 40 | 37 | 12 | 111 |
| மொத்தம் | 23 | 16 | 39 | 52 | 47 | 20 | 158 |

## விவசாய அமைச்சு

எமது அமைச்சு அலுவலகத்திற்கு 12 மில்லியன் ரூபா மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 2010ம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 9 மில்லியன் ரூபா செலவில் விவசாய தொழில்நுட்ப பூங்காவினை ஸ்தாபிப்பதற்கும், 3 மில்லியன் ரூபா செலவில் விவசாய உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்கான விற்பனை நிலையங்களை அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் 11 மில்லியன் ரூபா பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் மூலம் அமைச்சிற்கு தேவையான கட்டிட திருத்த வேலைகளைச் செய்வதற்கும் அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களை கொள்வனவு செய்வதற்கும்/புனருத்தாரண வேலைகளுக்கும் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் பிரயோகிப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மீன்பிடிப் பிரிவு

அமைச்சின் கீழ் இயங்கி வரும் மீன்பிடிப்பிரிவிற்கு 2010ம் ஆண்டில் 16 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் மூலம் 2 மில்லியன் ரூபாவினை மீன் வளர்ப்புக்கான தடாகங்களை அமைப்பதற்கும் மிகுதித் தொகை 4 மில்லியன் ரூபா மீன்பிடிப் பிரிவிற்குத் தேவையான கட்டட நிர்மாணம் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை 10 மில்லியன் ரூபாவினைக் கொண்டு பின்வரும் திட்டங்களை அமுல்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.



6

*மீன்குஞ்சுகளையும் இறால் குஞ்சுகளையும் இருப்பிடல்.*

குளங்களிலும், களப்புக்களிலும் மீன்குஞ்சுகளையும் இறால் குஞ்சுகளையும் இடுவதன் மூலம் மீன்வளத்தினை அதிகரித்தல். இதற்காக 03 மாவட்டங்களுக்குமாக 01 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளோம்.

*தடாக மீன் வளர்ப்பு முறையினை ஊக்குவித்தல்*

தடாக மீன் வளர்ப்பில் ஈடுபட ஆர்வமுள்ளவர்களுக்கு தடாகங்களை அமைப்பதற்கு 01 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*சங்கங்களின் இயலுமையை அதிகரித்தல்*

பதிவு செய்யப்பட்ட மீன்பிடி சங்கங்களின் திறனை அபிவிருத்தி செய்வதற்குரிய பயிற்சிக்காக 1 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டினையும் அதனூடாக மீனவர்களுக்குத் தேவையான தோணி, வலைகள் போன்ற பொருட்களை வழங்குவதற்காக 6 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யவும் தீர்மானித்துள்ளோம். சந்தைப்படுத்துவதற்குரிய உபகரணங்களை வழங்குவதற்காக 1 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## விவசாயத் திணைக்களம்

கிழக்கு மாகாணத்தில் முக்கியமான வாழ்வாதாரத் தொழில் விவசாயமாகும். நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் 25% இனை இம்மாகாணம் பங்களிக்கின்றது. இத்துடன் ஏனைய உப உணவுப் பயிர்கள், மரக்கறிகள், பழ வகைகள், கிழங்கு வகைகள் ஆகியனவும் முக்கிய பயிர்களாகும். இப்பயிர்களின் உற்பத்தியைக் கூட்டுவதற்கும், உற்பத்தி செலவினை குறைப்பதற்கும், விவசாய விளைபொருட்களின் பெறுமானத்தை கூட்டுவதற்கும், விவசாயிகளுக்கு அதிக வருமானத்தை ஈட்டுவதற்கும், நுகர்வோருக்கு குறைந்த விலையில் உணவுப் பொருட்களைப் பெறக்கூடிய வகையில் விவசாயத் திணைக்களம் பின்வரும் திட்டங்களை செயற்படுத்த தீர்மானித்துள்ளது.

*திராட்சைக்கொடி படர்வதற்கான கட்டமைப்புக்களை அமைத்தல்*

அதிக அறுவடையைப் பெறும் நோக்குடன் திராட்சைக் கொடிகளை படரவிடுவதற்கான கட்டமைப்புக்களை திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையங்களில் அமைப்பதற்கென 01 மில்லியன் ரூபா குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*வலை வீட்டின் கீழ் நடுகைப் பொருள் உற்பத்தி*

அதியுயர் உற்பத்தியை பெருக்குவதற்கு சிறந்த நடுகைப் பொருட்கள் அவசியமாகையால் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு விவசாயிக்கும் தலா ரூபா 10,000 நடுகைப் பொருள் உற்பத்திக்கென வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் 0.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



7

*பண்ணை இயந்திரம் மற்றும் விவசாய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான உதவிகளை வழங்குதல்*

தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு விவசாயிக்கும் தலா ரூபா 20,000 பண்ணை இயந்திரம் மற்றும் விவசாய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் 1.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*பெரிய வெங்காயச் செய்கை பரப்பினை விஸ்தீரணப்படுத்தல்*

கிழக்கு மாகாணத்தில் சின்ன வெங்காயச் செய்கையே பெரும்பாலும் மேற்கொள்ளப்படுகின்றது. பெரிய வெங்காயச் செய்கையை விஸ்தரிக்குமுகமாக பெரிய வெங்காயச் செய்கையில் ஈடுபட ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு ஒவ்வொரு ¼ ஏக்கருக்கும் ரூபா. 2,000 வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் 0.75 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*தேனீ வளர்ப்பினை ஊக்குவித்தல்*

விவசாயிகள் உற்பத்தி பெறாத காலங்களில் வருமானத்தினை ஈட்டக் கூடியதாக தேனீ வளர்ப்பினை ஊக்குவிக்கும் முகமாக தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு விவசாயிக்கும் தலா ரூபா. 1,500 வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென 0.25 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*சேதனப் பயிர் உற்பத்திக் கிராமங்களை உருவாக்குதல்*

தொடர்ந்து உரமானியத்தில் தங்கியிராது விவசாயிகளை சேதனப் பசளையினை உபயோகித்து சேதன விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்வதனை ஊக்குவிக்குமுகமாக தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு விவசாயிக்கும் தலா ரூபா. 3,000 வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் 0.25 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*நுண் நீர்ப்பாசனம்*

கிழக்கு மாகாணத்திலுள்ள விவசாய பண்ணைகளில் நுண்நீர்ப்பாசன முறைகளைப் புகுத்துவதன் மூலம் நீரை விரயமாக்காது அதன் மூலம் உச்ச பயனை பெறும் பொருட்டு நுண் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமுகமாக தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு விவசாயிக்கும் தலா ரூபா. 20,000 வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் 0.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*தூவல் நீர்ப்பாசனத்தின் கீழ் இலை மரக்கறி செய்கை*

தூவல் நீர்ப்பாசனத்தின் மூலம் இலை மரக்கறி செய்கையை ஊக்குவிக்குமுகமாக 0.25 ஏக்கருக்கு அதிகமான நிலப்பரப்பில் இலை மரக்கறி செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு தலா ரூபா 20,000 வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் 0.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



8

*இளைஞர் விவசாயக் கழக நடவடிக்கைகளுக்கு புத்துயிர்ப்பளித்தல்*

இளம் விவசாயக் கழக செயற்பாடுகளை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கென தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட இளைஞர் விவசாய கழகங்களுக்கும் தலா ரூபா. 10,000 வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் 0.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*விவசாய சங்கங்களின் இயலுமையை அதிகரித்தல்*

பதிவு செய்யப்பட்ட விவசாயச் சங்கங்களின் திறனை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் விவசாய இயந்திரங்களையும் உபகரணங்களையும் வழங்கும் பொருட்டு தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு விவசாய சங்கங்களுக்கும் ரூபா. 20,000 வீதம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் 0.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*மரக்கறி கிராமங்களை ஸ்தாபித்தல்*

கிழக்கு மாகாண மக்களின் மரக்கறி தேவையினை பூர்த்தி செய்யும்முகமாக மரக்கறி கிராமங்களை உருவாக்குவதற்கு மரக்கறி செய்கையில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு ரூபா. 2,000 வீதம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் 0.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பத்தினை வழங்குதல்*

விவசாய விளைபொருட்களை சந்தைக்கு கொண்டு செல்லும் போது ஏற்படும் இழப்புகளை குறைக்குமுகமாக பிளாஸ்டிக் கொள்கலன்களை வழங்குவதற்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் 0.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*வர்த்தக ரீதியான பழச்செய்கை*

வர்த்தகரீதியான பழமரச்செய்கையை விவசாயிகளிடையே ஊக்குவிப்பதற்காக ¼ ஏக்கருக்கு மேலாக பழச்செய்கையில் ஈடுபடும் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு தலா ரூபா. 3,000 வீதம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் 1 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*பரந்தளவிலான சோளச் செய்கையை விஸ்தரித்தல்*

கிழக்கு மாகாணத்தில் பரந்தளவிலான சோளச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு தெரிவு செய்யப்படவுள்ள ஒவ்வொரு விவசாயிக்கும் தலா ரூபா. 3,000 வீதம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் 3 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*அரிசிமா உற்பத்தியினையும் பாவனையையும் ஊக்குவித்தல்*

நெல் விலை வீழ்ச்சியினால் விவசாயிகள் பாதிப்படைவதைத் தவிர்க்கும் முகமாக அரிசி மா உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கு சிறியளவிலான மா அரைக்கும் இயந்திரங்கள் வழங்குவதற்கு தெரிவு செய்யப்படவுள்ள ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தலா ரூபா. 20,000 வீதம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் 2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



9

*விவசாய செய்முறை பயிற்சி நிலையங்களை அமைத்தல்*

விவசாயிகளுக்கு செய்முறை பயிற்சி அளிக்கும் நோக்குடன் செய்முறை பயிற்சி நிலையம் ஒன்றினை அமைப்பதற்கென மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் 1 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*விவசாய கட்டட நிர்மாணம்*

அம்பாறை மாவட்டத்தில் பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனைக்கான கட்டட நிர்மாணத்திற்கென ரூபா. 5 மில்லியன் ரூபாவும் அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளருக்கு விடுதி வசதியினை ஏற்படுத்துவதற்காக ரூபா. 3 மில்லியன் ரூபாவும் சுற்றுலா விடுதியும் அலுவலர்களுக்கான விடுதியும் அமைப்பதற்கு ரூபா. 10 மில்லியன் ரூபாவும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*விவசாயக் கிணறுகள் அமைத்தல்*

விவசாயக் கிணறுகள் அமைப்பதற்கு ரூபா 5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

*விவசாய கல்விச் சுற்றுலா*

விவசாயச் செய்கைத் தொழிநுட்பங்களை பயன்படுத்தல் தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கான விவசாயக் கல்விச் சுற்றுலாவிற்காக ரூபா 0.75 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

## கால்நடை உற்பத்தி அபிவிருத்தி திணைக்களம்

இம்மாகாணத்தில் பால் உற்பத்தியையும் நுகர்வையும் அதிகரிக்கும் முகமாகவும் கால்நடைகளின் நோய்த்தடுப்பு சிகிச்சை மற்றும் இனவிருத்தி சேவைகளை வழங்கவும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் ஆற்றலை மேம்படுத்துவதற்கும் பின்வரும் நடவடிக்கைகள் 2010ம் ஆண்டு திட்டமிடப்பட்டுள்ளன.

*பால் பதனிடுதலும் சந்தைப்படுத்தலும்*

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பாலை பதனிடுவதற்கும் சந்தைப்படுத்தும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடனும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் இருந்து ரூபா. 1.8 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*கால்நடை பசுந் தீவனம்*

கந்தளாய் மற்றும் குச்சவெளி பிரதேசங்களில் கால்நடைகளுக்கான புல் வகைகளை வளர்த்து அவற்றை கால்நடை தீவனமாக பயன்படுத்தும் நோக்குடன் புல் வகைகளை வளர்ப்பதற்கென ரூபா. 0.2 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



10

*கால்நடை வைத்தியர் பிரிவுகளில் பசுந்தீவன வளத்தினை உருவாக்குதல்*

கிழக்கு மாகாணத்தில் 10 கால்நடை வைத்தியர் பிரிவுகளை உள்ளடக்கிய 30 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு இக் கிராமங்களில் கால்நடைகளுக்கான புல்வகைகளை வளர்ப்பதற்கென மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் இருந்து ரூபா. 3.75 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*பாலுற்பத்தியை அதிகரித்தல்*

கிழக்கு மாகாணத்தில் பாலுற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் நல்லினக் காளை மாடுகளை வழங்குவதற்கென 2 மில்லியன் ரூபாவும் நல்லினக் கடாக்களை வழங்குவதற்கென 0.9 மில்லியன் ரூபாவும் பசுக்களை ஒருமுகப்படுத்தப்பட்ட வேட்கைக்கு கொண்டு வரும் செயற்திட்டத்திற்கென 0.7 மில்லியன் ரூபாவும் பிரமாண அடிப்படை கொடையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*முட்டை உற்பத்தியை அதிகரித்தல்*

தரமான தாயினக்கோழிகளை கொள்வனவு செய்து விநியோகிப்பதற்காக 0.3 மில்லியன் ரூபாவும் கொல்லைப்புறக் கோழி வளர்ப்புக்காக 1.75 மில்லியன் ரூபாவும் பிரமாண அடிப்படை கொடையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*கால்நடை வைத்திய அலுவலக திறனை விருத்தி செய்தல்*

அம்பாறை மாவட்ட கால்நடை வைத்தியர் அலுவலகம் மற்றும் வவுணதீவு கால்நடை வைத்தியர் அலுவலக கட்டட நிர்மாணத்திற்கென 14 மில்லியன் ரூபாவும் காத்தான்குடி கால்நடை வைத்தியர் அலுவலகத்திற்கென 7 மில்லியன் ரூபாவும் கந்தளாய் காளை நிலையத்தின் வேலி மற்றும் நீர் விநியோகித்தினை சீரமைப்பதற்கென 2.1 மில்லியன் ரூபாவும் உப்புவெளி பிராந்திய கால்நடை பண்ணையில் நீர் விநியோகம் மற்றும் பசுந்தீவனத்திற்கான புல்வகைகளை விருத்தி செய்வதற்காகவும் 2.5 மில்லியன் ரூபாவும் தளபாடம் மற்றும் அலுவலக உபகரண கொள்வனவு 1 மில்லியன் ரூபாவும் தொலைநகல், கால்நடை நோய்களை இனங்காணும் உபகரணங்கள் மற்றும் கால்நடை சத்திர சிகிச்சை உபகரணங்களின் கொள்வனவிற்கென 1 மில்லியன் ரூபாவும் பிரமாண அடிப்படை கொடையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*உட்கட்டமைப்பு மற்றும் உபகரண வசதிகளை புனர்நிர்மாணம் செய்தலும் மேம்படுத்தலும்*

அம்பாறை, மூதூர், வாழைச்சேனை, காத்தான்குடி ஆகிய பிரதேசங்களில் உள்ள கால்நடை வைத்தியர் அலுவலகங்களை புணருத்தாரணம் செய்வதற்காக 1 மில்லியன் ரூபாவும் வாகனப் பெறுகைக்காக 7 மில்லியன் ரூபாவும் பிரமாண அடிப்படை கொடையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கிராமிய கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம்

கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் சுயதொழில் வாய்ப்பினைப் பெருக்குவதற்கும், வருமானத்தினை ஈட்டுவதற்கும் கிராமிய கைத்தொழில் துறையின் அபிவிருத்தியானது இன்றியமையாததொன்றாகும்.



11

இம்மாகாணத்தில் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இத்திணைக்களமானது தனது பயிற்சி நெறிகளையும் கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் பன்முகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

*திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ திறனை அபிவிருத்தி செய்தல்*

கைத்தொழில் நிலையத்திற்கான வேலி அமைப்பதற்கு 1.75 மில்லியன் ரூபாவும், திருகோணமலையில் மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்திற்கென 2 மாடிக் கட்டட பூர்த்திக்காக 8 மில்லியன் ரூபாவும், கைத்தொழில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 1.25 மில்லியன் ரூபாவும், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு வர்த்தக மேம்பாட்டு நிலையங்களை அமைப்பதற்கு 0.75 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 12 மில்லியன் ரூபா மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்படும் மாகாண கைத்தொழில் அலுவலகத்திற்கென தளபாடம் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்களின் பெறுகைக்கென 1.25 மில்லியன் ரூபாவும், பயிற்சி நெறிகளுக்காக பங்குபற்றுநர்களை அழைத்துச் செல்லும் புதிய வாகனப் பெறுகைக்காக 6 மில்லியன் ரூபாவும், வாகன புனருத்தாரண வேலைகளுக்காக 0.75 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 8 மில்லியன் ரூபா பிரமாண அடிப்படையிலான நன்கொடையிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது.

கௌரவ முதலமைச்சர் அவர்களே, கௌரவ அமைச்சர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அவர்களே இதுவரை எமது அமைச்சினால் 2010ம் ஆண்டில் நிறைவேற்றப்படவுள்ள வேலைத்திட்டங்களைச் சபைக்கு முன்மொழிந்துள்ளேன்.

2009 ம் நிதியாண்டிற்கான எமது அமைச்சின் பாதிட்டு அறிக்கையினை கடந்த வருடம் இச்சபையில் சமர்ப்பித்து இச்சபையின் அனுமதியுடன் அதனை இவ்வருடம் நிறைவேற்றி வந்துள்ளோம். குறிப்பிட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது ஒரு சில சிறிய தவறுகள் இடம்பெற்றிருந்தாலும் அதனை பெரிதுபடுத்தாது ஏற்றுக்கொள்வீர்களென நான் முழு மனதுடன் எதிர்பார்க்கின்றேன்.

இவ்வகையில் என்னால் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2010 ம் நிதியாண்டிற்கான இம் முன்மொழிவுகளின் மூலம் எமது அமைச்சு செயல்படுத்தும் வேலைத்திட்டங்களின் ஊடாக

- கிழக்கு மாகாணத்தில் வேலைவாய்ப்புக்களை அதிகரித்து வழங்குதல்
- கிழக்கு மகாணத்தில் கிராமிய வளங்களை வினைத்திறனுடன் உச்சமாக உபயோகித்தல்
- கிழக்கு மாகாணத்தின் கிராமப்புற வறுமையை நீக்குதல்
- கிழக்கு மாகாணத்தின் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை குறைத்து சமமான அபிவிருத்தியினை ஏற்படுத்துதல்
- கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

போன்ற பொருளாதார இலக்குகளை அடைவதன் மூலம் கிழக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதில் விவசாய, கால்நடை, கிராமிய கைத்தொழில், மீன்பிடி துறைகளின் முக்கியத்துவத்தினை தற்போது நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். எனவே இவ்வேலைத்திட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு கௌரவமிக்க இச்சபையின் அனுமதியினைக் கோரி எனது பாதீட்டு உரையினை முடிவிற்கு கொண்டு வருகின்றேன்.



12